

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.07.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் நிலை1 பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், தலைமைப் பொறியாளர் பொ. பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (23.07.2024) நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களை தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற குழுத் தலைவரும் தூத்துக்குடி மக்களவை தொகுதி உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி மற்றும் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சந்தித்து "சமக்ரா சிக்சா " திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள நிதியினை மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு உடனடியாக விடுவிப்பது குறித்து விவாதித்தனர்.



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (23.07.2024) ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களை தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவரும் தூத்துக்குடி மக்களவை தொகுதி உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் மற்றும் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சந்தித்து "சமக்ரா சிக்சா " திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள நிதியினை மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு உடனடியாக விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

### கறுப்பு - பழுப்பில்லாத வகையில்

# நியாயவிலைக் கடைகளில் தரமான அரிசி விநியோகம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

திண்டுக்கல், ஜூலை 25-

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் ரூ.87.78 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, ரூ.1.69 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அமைச்சர் அர.சக்கரபாணி நியாயவிலைக் கடைகளில் கறுப்பு, பழுப்பு இல்லாத தரமான அரிசி விநியோகிக்கப்படுகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்.

தமிழகத்தில் 2009 நியாயவிலைக்கடைகள் பிரிக்கப்பட்டு புதியதாக முழுநேரம் மற்றும் பகுதிநேரம் நியாயவிலைக்கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில்



திண்டுக்கல் மாவட்டத்தல் 230 கடைகள் பிரிக்கப்பட்டுள்ளன.

குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களில், தகுதியுள்ளவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் 16 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நியாயவிலைக் கடைகளில் கைரேகை பதிவு மூலம் பதிவுகள் மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்க கண் கருவிழி பதிவுகள் மேற்கொள்ள 36,000 நியாயவிலைக் கடைகளிலும் கண்கருவிழி பதிவு கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

நியாயவிலைக்கடைகளில் தரமான அரிசி, பருப்பு, எண்ணைய், சர்க்கரை போன்ற பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. பொதுமக்களுக்கு தரமான அரிசி வழங்க வேண்டும் என்பதற்காக கலர்டாப்ளர் இயந்திரம் பொருத்தப்பட்ட அரிசி ஆலைகளில் மட்டுமே நெல் அரவை செய்யப்பட்டு, அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு கறுப்பு, பழுப்பு இல்லாத தரமான அரிசி விநியோகிக்கப்படுகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, 1.14 கோடி பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1.48 இலட்சம் நபர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டு வருகிறது. தகுதியுள்ள நபர்கள் அனைவருக்கும் கலைஞர் உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டம் தற்போது, அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் காலை உணவு திட்டத்தின் மூலம் மொத்தம் 20.73 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுகின்றனர்.

அரசின் திட்டங்களை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன், துணைத்தலைவர் தங்கம், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கிருஷ்ணசாமி, உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள பா.ஜ.க. தயாரித்த பட்ஜெட்!

## இ.கம்யூ - இரா.முத்தரசன் குற்றச்சாட்டு!

சென்னை, ஜூலை 25-

இந்திய நாடாளுமன்றத்தில் ஏழாவது முறையாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து இருக்கிறார். அதிக முறை தொடர்ச்சியாக நிதிநிலை அறிக்கையை ஒரே அமைச்சர் தாக்கல் செய்கிறார் என்பதை தவிர இதில் சாதனைகள் வேறு ஏதுமில்லை என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் குற்றம்சாட்டியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஏழைகள், பெண்கள், இளைஞர்கள் விவசாயிகள் ஆகியோரை மையப்படுத்தியதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது என்று சொல்லப்பட்டாலும், இந்தத் துறைகளை பயன்படுத்தி கார்ப்பரேட்டுகளுக்கு அதிக பயன்கள் தரப்பட்டுள்ளன.

உயர் விளைச்சலுக்கான நூற்றுஒன்பது புதிய வகை தானியங்கள். எண்ணெய் வித்துக்கள் உருவாக்கப்படுவதாக சொல்லிக் கொண்டே, இயற்கை விவசாயத்தை மேம்படுத்தப் போவதாக கூறுவது முரண்பாடு நிறைந்ததாக உள்ளது.

ஏற்கனவே விவசாயத்தை கார்ப்பரேட் மயமாக்குவதற்கு 3 வேளாண் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இப்போது கிளஸ்டர் என்ற பெயரில் மீண்டும் அதே முயற்சி எடுக்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு குறித்து நிதி நிலை அறிக்கையில் நிறைய பேசப்படுகிறது. ஆனால் புதிதாக சேர்க்கப்படும் தொழிலாளர்களுக்கு முதல் மாதம் சம்பளத்தை அரசாங்கமே வழங்கும் என்றும், அவர்களுக்கு வருங்கால வைப்பு நிதி தொகை பங்களிப்பை அரசே செலுத்தும் என்றும் சொல்வது, தொழிலாளர்களுக்கு அல்ல, முதலாளிகளுக்குத்தான் அதிக



நன்மையை ஏற்படுத்தும். மேலும் இந்த வேலை வாய்ப்புகளும் நிரந்தரமானதாக அமைவதற்கான சாத்திய கூறுகளை பற்றி நிதிநிலை அறிக்கை ஏதும் பேசவில்லை.

மைனாரிட்டி அரசாங்கத்தை தாங்கிப் பிடிக்கிற ஐக்கிய ஜனதா தளத்தையும், தெலுங்கு தேசம் கட்சியையும் திருப்தி படுத்துவதற்கு அரசு நிதி அள்ளிக் கொட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே ஆந்திர பிரதேசத்துக்கு தனித்தகுதி அளிக்க மறுத்த பா.ஜ.க. அரசு இப்போது அவர்கள் கேட்ட நிதியை வழங்கி இருக்கிறது.

பணமதிப்பிழப்பு நடவடிக்கையாலும், புதிய ஜிஎஸ்டி வரி விதிப்பாலும் தொய்வடைந்து சுருண்டு வீழ்ந்துவிட்ட லட்சக்கணக்கான சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு நிதி ஆதாரத்தை உருவாக்கவும், மேம்பாடடையச் செய்யவும் உருப்படியான திட்டம் எதுவும் இல்லை. கார்ப்பரேட்டுகளின் வலுமிக்க தாக்குதலில் இருந்து இந்த சிறு குறு நடுத்தர தொழில்களை காப்பாற்றுவதற்கு பதிலாக, உலக அளவில் போட்டிக்கு இவற்றை தயார் செய்யப் போவதாக கூறுவது வெற்று உரை ஆகும்.

பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 10 லட்சம் கோடி ரூபாய்களுக்கு வீடு கட்ட போவதாக படாடோபமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதில் ஒன்றிய அரசின் பங்களிப்பு 2.2 லட்சம் கோடி ரூபாய் தான். மீதி 7.8 லட்சம் கோடி ரூபாய் மாநில அரசுகளின் தலையில் விழுகிறது.

பீகார் , அஸ்ஸாம் போன்ற மாநிலங்கள் நாட்டுக்கு வெளியில் இருந்து வரும் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதாக இப்போதுதான் நிர்மலா சீதாராமன் கண்டுபிடித்திருக்கிறார்.

மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் இமாச்சலப் பிரதேசம், உத்தரகண்ட், சிக்கிம் ஆகிய மாநிலங்களிலும் மறுகட்டமைப்பு ஏற்படுத்துவதற்கும் மறுவாழ்வு முயற்சிகளுக்கும் அதிக நிதியை ஒன்றிய அரசு ஒதுக்குகிறது. ஆனால் தமிழ்நாடு உள்பட வெள்ளத்தால் பாதிக்கப்படும் தென்மாநிலங்களை பற்றி மூச்சு கூட விடவில்லை.

சுற்றுலாவை மேம்படுத்துகிறோம் என்ற முறையில் விஷ்ணுபோதி, மகாபோதி, காசி விஸ்வநாதர் கோவில் உள்ளிட்ட இந்து, புத்த, ஜைன கோவில்களுக்கு புனித யாத்திரை திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதே போல அண்மையில் பாஜக வெற்றி பெற்றுள்ள ஒடிசா மாநிலத்திற்கு சுற்றுலாத் திட்டங்கள் தரப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் எழில் கொஞ்சும் கடற்கரைகளையும், மேற்கு மலைத் தொடர்ச்சியையும், கோடை வாசஸ்தலங்களையும், வேறெந்த மாநிலங்களையும் விட அதிக கோவில்களையும், பாரம்பரிய சின்னங்களையும் கொண்ட தமிழ்நாட்டின் சுற்றுலா மேம்பாட்டுக்கு எந்தத் திட்டமும் இல்லை. இதில் மட்டும் அல்லாமல், அனைத்து வகைகளிலும் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டிருப்பது, பெரும் கண்டனத்திற்குரியதாகும்.

பொருளாதாரச் சீர்திருத்தங்கள் என்ற முறையில், பெரு முதலாளிகளுக்கு வசதியாக நிலம், தொழிலாளர், மூலதனம் ஆகிய மூன்றையும் இன்னும் எளிமையாக கிடைக்க செய்வது பற்றி நீதி நிலை அறிக்கை பேசுகிறது. “தொழில் நடத்துவதை எளிமையாக்குதல்” என்ற பேரில் கார்ப்பரேட் சலுகைகள் தொடர்கின்றன. குறைந்த விலையில் நிலத்தை கையகப்படுத்தி முதலாளிகளுக்கு தருவது, தொழிலாளர் உரிமைகளை பறித்து அற்றை கூலிகளாக மாற்றி எப்பொழுது வேண்டுமானாலும் வேலையை விட்டு துரத்த வழிவகை செய்வது, வரிகளை தள்ளுபடி செய்தும் வங்கி கடனையே தள்ளுபடி செய்தும் முதலாளிகளுக்கு பொது மக்களின் பணத்தை மூலதனமாக தருவது என தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் விரோதமான முறையில் தனது பொருளாதாரப் பயணத்தை பாஜக அரசு மேலும் முனைப்பாக தொடர்கிறது.

மாதம் ரூபாய் 20,800 வரை வாங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு வருமான வரி இல்லை என்பதை இப்போது ரூ.25,000 வரை வரி இல்லை என்று உயர்த்தி இருக்கிறார்கள். காலம் கடந்து வந்த இந்தச் சலுகை பெரிய அளவுக்கு உதவப் போவதில்லை.

வருமான வரி கட்டுவதற்கு ஏற்கனவே இருந்த முறைமையை மாற்றி புதிய முறைமையை பாஜக அரசு கொண்டு வந்தது. பழைய முறைமையில் இருந்த பல சலுகைகள் பறி போவதாகக் கருதிய ஊதிய பிரிவினர் புதிய முறைமைக்கு மாற தயக்கம் காட்டி வந்தனர். அவர்களை புதிய முறைமைக்கு இழுப்பதற்கு இந்த நிதி நிலை அறிக்கை முயல்கிறது.

ஜி.டி.பி. கணக்கில் பார்க்கும் போது உலகத்தில் ஐந்தாவது இடத்தில் இந்தியா இருந்தாலும், தனிநபர் ஜிடிபி என்று பார்க்கும்போது 126வது இடத்தில் இருக்கிறது. உலக அளவில் அதிக ஏழைகள் வாழும் நாடாகவும், உலகத்தின் கடும் பட்டினியில் வாடும் 15 நாடுகளில் ஒன்றாகவும் இந்தியா இருக்கிறது. வெறும் பத்து சதவீத மக்கள் மட்டுமே மேலதிக சொத்துக்களையும், உயர் வருவாயையும் பெறும் வகையில் பாஜக அரசின் பொருளாதார கொள்கை உள்ளது.

ஒரு புறம் செல்வக் குவிப்பு உச்சத்துக்கு ஏறுகையில், மறுபக்கத்தில் 50 கோடிக்கு மேற்பட்ட மக்கள் அதீத வறுமையில் உழல்கிறார்கள். இதை ஓரளவுக்காவது மாற்றுவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

தனது அரசு நிலைப்பதற்காக பீஹார், ஆந்திரா மாநிலங்களின் ஆளுங்கட்சிகளை குளிர வைக்கவும், வெகு விரைவில் சட்டமன்றத் தேர்தல்கள் வர இருக்கும் மாநிலங்களில் தமது கட்சிக்கு வாக்குகளை ஈர்க்கவும், வழக்கம் போலவே கார்ப்பரேட்டுகளுக்கும் பெரு வணிக குழுக்களுக்கும் உதவி செய்யவும் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை இது.

இவ்வாறு இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை!

## ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, ஜூலை 25-

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. ஒன்றிய அரசின் பட்ஜெட் குறித்து விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பத்தாண்டு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்தங்கள் நிதி ஆயோக் மூலம் பெற்ற ஆலோசனைகள் எவையும் நாட்டின் சாதாரண எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு பயனளிக்கவில்லை.

தற்போது ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ள 2024-25 வரவு செலவு அறிக்கையில் உற்பத்தி, வேலை வாய்ப்புகள், சமூக நீதி, நகர்ப்புற மேம்பாடு, எரிசக்தி பாதுகாப்பு, உள்கட்டமைப்பு



மற்றும் சீர்திருத்தங்கள் உள்ளிட்ட 9 கூறுகளில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

மேலும் இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள், ஏழைகள் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பும் கடந்த ஆறு முறை நிதியமைச்சர் தாக்கல் செய்த வரவு செலவு அறிக்கையில் இடம் பெற்றிருந்தது தான், ஆனால் செயல்பட்டிற்கு வந்ததா என்பது தான் கேள்விக்குறி.

இந்திய பொருளாதாரம் 6.5 முதல் 7 விழுக்காடு வளர்ச்சி அடையும் என்றும், பண வீக்க விகிதம் 4.5 விழுக்காடு அளவு குறையுமென்றும் பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் நடைமுறையில் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்படவில்லை.

உணவு பணவீக்கம் 7.5 விழுக்காடாக அதிகரித்ததால் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்தன என்பதுதான் உண்மை நிலை ஆகும்.

வேளாண்மை துறைக்கு ரூ.1.52 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து ஓராண்டு காலம் போராடிய விவசாயி கள் முன்வைத்த கோரிக்கைகள் நிதிநிலை அறிக்கையில் ஏற்கப்படவில்லை என்பது ஏமாற்றம் தருகிறது.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் ஒன்றிய அரசின் பாரா முகத்தாலும், ஜி.எஸ்.டி வரி விதிப்பு முறையாலும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றன. இதனால் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்புக்கு தள்ளப்பட்டனர். உடனடியாக இவற்றிலிருந்து மீள்வதற்கு நிதிநிலை அறிக்கையில் எதிர்பார்த்த அறிவிப்புகள் இல்லை.

ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தருவோம் என்று மோடி அரசு தந்த வாக்குறுதிகள் காற்றிலே பறந்தன. இந்நிலையில், தற்போது ரூபாய் 2 லட்சம் கோடி செலவில் 4.1 கோடி இளைஞர்களுக்கு ஐந்தாண்டுகளில் வேலைவாய்ப்பு திறன் பயிற்சி மட்டும் அளிக்கப்படும் என்று கூறியிருப்பதும், 500 முன்னணி நிறுவனங்களில் ஒரு கோடி இளைஞர்களுக்கு இன்டர்ன்ஷிப் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் படித்த இளைஞர்களுக்கு ஏமாற்றத்தையே தருகிறது.

அசாம், உத்தரகாண்ட், சிக்கிம், இமாசலப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் வெள்ள பாதிப்புக்கு சிறப்பு நிதி ஒதுக்கியுள்ள ஒன்றிய அரசு, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் வஞ்சித்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

அதைப்போல பீகார், ஆந்திரா, ஜார்க்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களுக்கு சிறப்பு திட்டங்களை செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்துள்ள நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் வைத்த கோரிக்கைகளை ஒன்றிய நிதியமைச்சர் புறந்தள்ளி இருக்கிறார்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு இல்லை. கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் மற்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் புதிய ரயில்வே திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு இல்லை.

பண மதிப்பு இழப்பு, ஜி.எஸ்.டி, கொரோனா தாக்கம், மின் கட்டண உயர்வு உள்ளிட்டவற்றால் அடுத்தடுத்து நெருக்கடிகளை சந்தித்து வரும் கோவை மாவட்ட தொழில் துறை வளர்ச்சிக்கு திட்டங்கள் எதுவும் இல்லாததும் மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

இவ்வாறு வைகோ விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கொப்புடைய நாயகி அம்மன் கோயில் நிர்வாகத்திற்குட்பட்ட ரூபாய்ஒரு கோடியே 50 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட வாரச் சந்தையை சென்னையிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நிகழ்ச்சியில் பங்கேற்றார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசா அஜித், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. காரைக்குடி நகர மன்ற தலைவர் எஸ்.முத்து துரை, துணை தலைவர் என்.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.